Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 15—No. 7

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

| மலர் 15 | சித்திரபானு ஆண்டு ஆடித் திங்கள் 1942ஷ ஜூலைமீ | இதழ் 7 |
| --- | --- | --- |

141

உள்ளுறை பக்கம்

தோன்றாத்துணை ... 273
ஆஸ்திக நாஸ்திக சம்பாஷணை ... 277
திருவாரூரர் ... 285
சீதையின் திருமணம் ... 293
மகாமகோபாத்தியாயா பண்டிதமணி ... 304

பத்திரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சித்தாந்த மகாசமாஜம்

வக்கீல் லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1942 தனிப் பிரதி அணா 4.

# ஞானியார் சுவாமிகள் நினைவு நிதி

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய நினைவு நிதிக்குக் கீழே குறித்துள்ள அன்பர்கள் பொருளுதவி புரிந்துள்ளார்கள். ஏனைய அன்பர்களும் விரைவில் தாங்கள் விரும்பிக் கொடுக்கக் கருதும் பொருளை விரைவில் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

| திருமிகு | ரூ. | அ. |
|---|---|---|
| க. அரங்கசுவாமி முதலியாரவர்கள் ... | 108 | 0 |
| அ. கு. காமாக்ஷியம்மையாரவர்கள் ... | 100 | 0 |
| மயிலைகிழார் இளமுருகனாரவர்கள் ... | 100 | 0 |
| திவான்பகதூர். டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் | 50 | 0 |
| ராவ்பகதூர். சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் | 50 | 0 |
| ராவ்சாஹிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் ... | 50 | 0 |
| ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் ... | 25 | 0 |
| மு. அருணாசலம் பிள்ளையவர்கள் ... | 20 | 0 |
| தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள் ... | 16 | 0 |
| தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் ... | 10 | 0 |
| கா. இராமநாதன் செட்டியாரவர்கள் ... | 6 | 4 |
| கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் ... | 5 | 0 |
| என். எஸ். இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் ... | 5 | 0 |
| K. A. சிவஞானம் பிள்ளை அவர்கள், வழக்கறிஞர், அம்பாள்சமுத்திரம் ... | 5 | 0 |
| தலைவர், சைவ சித்தாந்த சபை, பழநி ... | 10 | 0 |
| ஆக | 560 | 4 |

ம. பாலசுப்பிரமணியன்,

*காரியதரிசி*

---

# சமாஜ கோடைகால விடுமுறை

சமாஜ காரியாலயத்துக்கு வழக்கம்போல் 10-5-42 முதல் 25-7-42 வரை கோடைகால விடுமுறை நாட்களாகும். ௸ தேதிக்குமேல் காரியாலயம் திறக்கப்படும். அதன் பிறகுதான் மணியார்டர்களும், புத்தக ஆர்டர்களும் கவனிக்கப்படும்.

Reg. M. 2330

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் 15 | சித்திரபானு ஆண்டு ஆடித் திங்கள் 1942ஆம் ஜூலைமீ | இதழ் 7 |
| --- | --- | --- |

## தோன்றாத் துணை

[பத்திராசிரியர்]

உலகத்தில் மக்கள் ஒருவர்க்கொருவர் துணைபுரிந்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அத் துணை, நிலைபெறுக நிற்பதன்று. அது மாறிமாறிச் செல்வதை நாம் அறிகிறோம். என்றும் இன்பம் பயக்கும் உதவியாக அதைக் கருதுதற்கில்லை. ஆனால், பொதுவாக மன்பதையில் மக்கள் தாமும் உண்டிருந்து மற்றவர்கட்கும் உதவிசெய்து வாழ்வதே பெருந்துணை செய்வதாய்க் கருதுகிறார்கள். சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய உயிர்கள் செயற்கரிய துணை செய்வது ஏலாததொன்றேயாம். உடலோம்பும் துணையே நம்மாற் செய்ய இயலும். உயிரோம்பும் துணைபுரிய மக்களால் இயலா. உயிருக்குற்றுள்ள பற்றை நீக்கி அதை இடை-

விடாது பாதுகாத்து ஊழ்பித் துன்பமும் அணுகா வண்ணம், இடருறும்போதெல்லாம் உடனின்று உதவி புரிந்து தோன்றாத் துணையாயிருப்பது பரம்பொருள் ஒன்றேயாம். இதனையே அப்பமூர்த்திகள்.

“ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே”

என்று அருளிச் செய்திருக்கிறார்கள்.

ஈண்டு, தோன்றாத்துணை என்று ஆண்டவனை அப்பர் ஆர்வம்பொங்க அழைக்கிறார். தம்மைக் கல்லோடு பிணைத்துக் கடலில் அமணர் செலுத்தியபோது நாவரசர் அஞ்சாது மகிழ்ச்சி ததும்ப,

“சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே”

என்று வேறொன்றையும் எண்ணாது ஏத்துவோம் இறைவனையே என்று பதிகம் ஓதியருளினர். அப்போதே கல் தெப்பமாக மாறிக் கரைசேர்ந்தது. அவ்விடமே கரையேற விட்ட நகராம். அங்ஙனம் துணை புரிந்த ஆண்டவனைத் தோன்றாத் துணை என்று அப்பர் வியந்து பாடினார். கட்புலனுக்கெட்டாத ஒரு துணையை எங்ஙனங் கண்டு தோன்றாத் துணை என்று கூறினாரெனில், அவர் கருத்தில் கண்கொண்டு அதாவது அகக்கண் கொண்டு அத்துணையைக் கண்டார். ஞானக்கண்ணால் தோன்றாத் துணையாய் நிற்கும் தோன்றலைக் கண்டவர் சிவானந்தத்தில் திளைப்பவராவர். அவ்வானந்தம் இத்

தகையதென முகத்தில் கண்கொண்டு பார்க்கின்றவர்கள் கூற இயலாது. இதனை,

"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனம்"

என்னும் திருமந்திரத்தால் அறியலாம்.

உள்ளத்தே நின்று உயிர்ப்புளேவரும் கள்ளத் தேவன், தோன்றாத் துணையாய் நின்று அருள் புரிந்த தன்மையால், நாவரசர், அஞ்சா நெஞ்சினராயினர். திருப்பாதிரிப்புலியூரில் அறைந்த மற்றொரு திருப்பாட்டாலும் அவரது இடையறா அன்பின் பெற்றியைக் காணலாம்:

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன் றுகண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே"

என்னும் இத்திருப்பாட்டாலும், இதுபோன்ற பல பாடல்களாலும் தாண்டகச் சதுரர் சாற்றும் தன்மையைச் சிந்தித்து அவர் வகுத்த நெறியில் நின்று மன உறுதியோடு, எத்தகைய இடுக்கண்வரினும் அஞ்சல் நெஞ்சே என்று ஆண்டவனுடைய இணையடிகளைச் சிக்கெனப் பிடித்து உரங்கொண்டு நிற்கவேண்டும்.

அங்ஙனம் ஒன்றுபட்ட உள்ளத்தினராய் நிற்பவர்கட்கு எத்தகை இடுக்கண்களும் எதிர் நில்லா. இதனை,

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினை தொந்தந்தா னென்செயும்

தில்லை மாநகர் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே "

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற ஆப்தர் மொழிக்கிணங்க ஆண்டவனது திருவடிக் கன்புபூண்டு அடிமைப்பட்டவர்க்குப் பண்டை வினையும் பறந்து ஓடும். உண்மை, உறுதி, அஞ்சாமை என்னும் நிலையில் நின்று ஒழுகினவர்களே அறுபான்மும்மை நாயன்மார்கள். இக்காலத்து மக்கள் 'கடவுள் கடவுள் என்று எண்ணுகிறவர்கட்குத்தான் துன்பம் பெருகுகிறது' என்று எங்கும் பேச நாம் கேட்கிறோம். இன்பம் வந்த காலத்துக் கடவுளைப் புகழ்வதும், துன்பம் வந்தகாலத்துக் கடவுளை இகழ்வதுமாகிய சிற்றறிவுடையவர்கட்கா கடவுள் உதவி கிடைக்கும்? எத்தகை இடுக்கணுறினும் ஏத்துவம் எந்தையையே என்று ஆசிரியன்மார் உணர்த்தியிருக்கிறார். "இடரினும் தளரினும் எனதுறு நோய், தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்" என்று திருஞானசம்பந்தர் ஓதுகிறார்.

"இறக்கினு மின்றே யிறக்குக என்றும்
இருக்கினு மிருக்குக வேந்தன்
ஒறுக்கினு மொறுக்க வுவகையு முடனே
யூட்டினு மூட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்க கொடியநீ நரகஞ்
சேரினுஞ் சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தால்
மாற்றுவார் யாரென மறுத்தார்"

என்று மணிவாசகனார் உறுதியோடு அஞ்சாமற் பேசுகிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் கண்ணிழந்த காலத்தும் "அடியேன் பிழைப்பனநி லும் திருவடிப்

பிழையேன்" என்று கூறும் அமுத வாக்கும் சிந்தனைக் குரியது.

அருட்டிருமேனியுடைய ஆண்டவனை இடையறு மல் உள்ளன்போடு எதுவரினும் வருக என்று அஞ்சாமல் வழிபடுவோர்க்கு அவன் தோன்றுத் துணையா யிருந்து அருள் புரிவதை இக்காலத்தும் காணலாம். அங்ஙனம் அருள் செய்த வரலாறுகள் பல உள. மெய் யன்பர்கள்பால் கேட்டுத் தெளிக.

# ஆஸ்திக நாஸ்திக சம்பாஷணை

இது, நிகழும் 1919ஆம் ஏப்ரல்மீ 27உ நடைபெற்ற சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்து 20-வது சபா வருடப் பூர்த்தி விழாவில் சைவபாடசாலை மாணவர்கள் சம்பாஷிக்க வேண்டி, இப்பத்திரிகாசிரியரால் இயற்றப் பட்டது. இது பாடசாலைகள் தோறும் அவசியம் கற்பிக் கற்பாலதொன்றும்.

சுந்தரம் :—அடா, கந்தா, சைவப்பழமே, எப்போது பழுத்து விட்டாய்? கழுத்தில் ஒரு கொட்டை கட்டிக் கொண்டாய். உடம்பெல்லாம் சாம்பல் பூசிக்கொண்டாய். எந்த மூடனிடத்தில் இந்த வேடம்போடக் கற்றுக் கொண் டாய்?

கந்தன் :—அப்பா, சுந்தரம். நீ இம்மாதிரி பேசுவது நன்றுயில்லை. நீ இப்படியே பல பெரியோர்கள் மனம் புண் படப் பேசித் திரிகிறுய்; இது உனக்குத் தகாது.

சு :—நான் எந்தப் பெரியவாள் மனதைப் புண்படுத்தி னேன்? நீ சொல்லும் பெரியவாள் எவ்வளவு பெரிய மரங் களை அறுக்கும்?

க :—அப்பா, நீ இப்படிப் பேசுவது ஒரு சாமர்த்தியம் என்று நினைக்கிறாய். நான் பெரியவர்கள் என்றால் நீ பெரியவாள் என்று சொல்லி ஏளனஞ்செய்கிறாய். இது ஒரு சாமர்த்தியமா? ஆனால் நான் சொல்லும் பெரியவர்கள் பெரியவாள்களே. அவ்வாள்கள் சாதாரணமான மரங்களை அறுப்பதில்லை. ஐம்புலப்பகையை யறுத்தெறியும். குதர்க்கம்பேசும் துட்டநாவைத் துண்டித்துவிடும்.

சு :—ஏதடா, புலையனாய்விட்டாயே!

க :—அப்பா, உன்னோடுபேச நேரிடும் புலவனும் புலையனாவது அதிசயமா!

சு :—என்னை இறக்காமல் இறக்குகின்றாயே. இப்படிச் சாதுரிமாய்ப் பேசுவதற்கு யாரிடத்தில் கற்றுக்கொண்டாய்? இது இருக்கட்டும். இப்போது நீ எங்கே மெத்த அவசரமாய்ப் போகிறாய்?

க :—நான் கோயிலுக்குப் போகிறேன்.

சு :—கோயிலில் உனக்கென்ன உத்தியோகம்?.

க :—கோயிலில், கடவுளை வழிபடப்போகின்றேன். அங்கே எனக்கு வேறொரு உத்தியோகம் இல்லை.

சு :—கடவுள் ஒருவர் உண்டு என்பதை நன்றாய் தெரிந்துகொண்டாயா?.

க :—தெரிந்து கொண்டபடியாற்றான் கோயிலுக்குப் போகிறேன். இல்லாவிட்டால் கோயிலுக்குப் போவேனா. நீயே தெரிந்துகொள்ளலாமே.

சு :—நான் நெடுங்காலமாக அவரைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்தும் இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை. நீ எப்படியப்பா அவரைக் கண்டுபிடித்தாய்! எனக்கும் அவரைக் கொஞ்சங் காட்டமாட்டாயா?.

க :—அப்பா, நீ உண்மையாய் கடவுளை யறியவிரும்பி ஆராய்ச்சி செய்தால் உனக்குச் சொல்லத்தகும். நீயும் அறிந்துகொள்வாய். நீ குதர்க்கம் செய்யவேண்டி உன் மனம் போனபடி யெல்லாம் கேள்விகளைக் கேட்டால்,

உனக்குச் சொல்வதினுல் யாது பயனுண்டாம். ஒருபயனும் உண்டாகாது. ஆதலால் என்னை விட்டுவிடு. நான் சீக்கிரம் போகவேண்டும்.

சு:—அப்பா கந்தசாமி, இனி நான் உன்னிடம் குதர்க்கம் செய்யமாட்டேன். கடவுள் உண்டு என்பதைமாத்திரம் எனக்கு விளக்குவாயானுல் நீ ஊருக்கெல்லாம் கந்தசாமியானுல் எனக்குச் சொந்தசாமியாயிருப்பாய்.

க:—கடவுள் என்னும் பதத்திற்கு என்ன பொருள் என்பதை யறிந்துகொண்டாயா ?.

சு:—அதுவும் எனக்குத் தெரியாது. நீ தான் சொல்ல வேண்டும் ?.

க:—கடவுள் என்பதற்குக் கடந்தது என்பது பொருள். நாம் எதையும் மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கரணங்களால் அறிகிருேம். இவைகளைக் கடந்தது எதுவோ, அதாவது இம்மூன்றினுலும் அறியப்படாதது எதுவோ, அதுவே கடவுள் எனப்படும். அம்மாதிரியான பொருளை நான் உனக்கு எதைக்கொண்டு தெரிவிக்கக்கூடும். நீ எதைக்கொண்டு அறியக்கூடும்.

சு:—ஆனுல் அப்பொருளை நீ மாத்திரம் எப்படி அறிந்து கொண்டாய் ?.

க:—உன் மனதைக் குதர்க்கத்தில் செலுத்தாமல் நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். ஒரு பொருளை மூன்று வழியாய் அறியலாம். அவ்வழிகள் சுருதி, யுக்தி, பிரத்தியட்சம் என்னப்படும். அவற்றுள் சுருதி என்பது பெரியோர்கள் தாம் அனுபவித்தறிந்தவைகளைப் பிறரும் அறிந்து கொள்ளும்படி எழுதிவைத்த சாஸ்திரங்கள். உலகத்தைச் சுற்றி யாத்திரைசெய்தவர்கள் இவ்வுலகம் பந்தைப்போல் உருண்டைவடிவாயிருக்கிறதென்று அறிந்து, அதை நூலின் மூலமாக மற்றவர்களுக்கும் விளக்கினுர்கள். மற்றவர்களும் அந்நூலைப்படித்து அவர்கள் கூறியபடி யாத்திரைசெய்து, இவ்வுலகம் உருண்டைவடிவமாயிருத்தலை பிரத்தியட்சமாக

அறிகிறார்கள். அவர்கள் தாம் கண்ட அனுபவத்தைப் பிறர்க்குச் சொல்லியிராவிட்டால் மற்றவர்கள் இவ்வுலகம் தட்டையாயிருக்கிறதென்றே எண்ணிக் கொண்டிருப்பார்கள். இப்படியே ஆதியிலே பலர் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறே கடவுளை யறிந்து இன்புற்ற பெரியோர்கள் தாம் அனுபவித்த இன்பத்தை நம்போல்வாரும் அனுபவிக்கவேண்டி வேதமுதலிய நூல்களை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள். அவைகளைப் பத்தியோடும் சிரத்தையோடும் படித்து அவைகளிற் சொல்லியபடி நடந்தால் கடவுளை யறியலாம். அல்லாமலும், தூரத்தே புகையைக் கண்டபோது அவ்விடத்தில் நெருப்பு உண்டென்று யுக்தியால் அறிவதுபோல், இவ்வுலகத்தின் அமைப்பையும் தோற்றக் கேடுகளையுங்கொண்டு இதைப் படைத்த பேரறிவுடைய கடவுள் ஒருவர் உண்டென்று நிச்சயிக்கலாம்.

சு:—ஆனால் பிரத்தியட்சப் பிரமாணத்தால் கடவுளை யறியக் கூடாதோ?

க:—பிரத்தியட்சமாவது மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறிகளைக்கொண்டு சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பவைகளையறிதல். கடவுள் இவ்வைந்தில் ஒன்றாயிருந்தால் அவரைப் பிரத்தியட்சமாக அறியலாம். அவர் இந்த ஐந்திற்கும் வேறானவர் எனில், அவரை நாம் எப்படி ஐம்பொறிகளைக்கொண்டு அறியலாம்.

சு:— ஆனால் அவருடைய சொரூபம் தான் யாது? அதை அறிவிப்பது எப்படி?,

க:— ஆதியும் நடுவுமுடிவுமில்லாத ஆனந்த மயமும் ஞானமயமுமாயிருப்பது அவருடைய சொரூபம், அது ஞானிகளின் அநுபவ மாத்திரமாயிருப்பதேயன்றி எவர்களாலும் பிறர்க்கு எடுத்துச்சொல்லுந் தரத்ததன்று, உலகத்தில் அவரவர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்களே பிறர்க்கு எடுத்துச்சொல்லக் கூடியனவாயில்லை எனில், பேரின்ப ரூபமாகிய கடவுளின் சொரூபத்தை எப்படி விளக்கக்கூடும்,

ஞானிகளும் அப்பொருளைப்பெற்று இன்பம் அனுபவிப் பார்களே யன்றி வாயினாற்சொல்ல மாட்டார்கள்.

ந :— ஆனால் அப்படிப்பட்ட கடவுளை வணங்குவதை விட்டுக் கோயிலுக்குப்போய் கல்லை வணங்குவதேன் ?

ஆ :— பெரியோர்கள் சொன்னதை நம்பி நடந்தால் கடவுளை யடைந்து பேரின்பம் பெறலாம் என்று நான் உனக்கு முன்னமே சொன்னேன். அதை இதற்குள் மறந்து விட்டாய்போலும். கோயில் வழிபாடானது கடவுளை யடைவதற்கு மிகவும் அவசியமான மார்க்கம். பசுவின் பால் அதின் தேக முழுவதும் வியாபித்திருந்தாலும் அதின் முலையின் வழியாய் அதை எப்படிப் பெறுகின்றோமோ, அப்படியே கடவுள் எங்கும் வியாபித்திருந்தாலும் கோயில் வழிபாட்டினால் அவரருளை எளிதில் பெறலாம். கோயில் வழிபாட்டின் மூலமாகவே நம்முன்னோர்களெல்லாம் கட வுளை அறிந்து உய்ந்தார்கள். நாம் சமுத்திரத்தைப் பூசிக்க வேண்டுமானால், ஏதேனும் ஒரு துறையிலிருந்து பூசித்தால் அச்சமுத்திரத்தைப் பூசித்தவராவோம். அப்படியே எங்கும் நிறைந்த கடவுளை நாம் ஏதேனும் ஓரிடத்தில் பூசித்தால் அவரையே பூசித்தவர்களாவோம்.

ந :—நாம் கடவுளைப் பூசித்தால் அவருக்கேதேனும் இலாபமுண்டா ?

ஆ :—அவருக்கு யாதொரு இலாபமும் இல்லை. அவர் விருப்பு வெறுப்பற்றவர், இன்பதுன்பம் இல்லாதவர், நாம் துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் பெறும் பொருட்டே அவரை வணங்குவது.

ந :— அப்படியானால், நான் இப்போது உன்னுடன் கோயிலுக்கு வந்து தேங்காய் உடைத்துக் கும்பிடுபோட் டால் என் துன்பமெல்லாம் போய் இன்பம் உண்டாய் விடுமா ?.

ஆ :— நீ நீரிற்குமிழி போல் நிலையற்ற இவ்வுலக இன் பத்தை யனுபவிப்பதற்கு இரவும் பகலும் எவ்வளவு பாடு

படுகிறாய்! அதில் ஆயிரத்தில் ஒரு கூறளவாயினும் பாடு படாமலும், அன்பில்லாமலும் தேங்காய் உடைத்துக் கும் பிடுபோட்டால் துன்பம் நீங்கிப் பேரின்பம் உண்டாய் விடுமா. ஒருபோதும் உண்டாகாது.

சு :— ஆனால் அந்தக் கடவுளையடைந்து இன்பம் பெறு தற்கு நான் என்ன செய்யவேண்டும்?.

க :—சுத்தமான மனதோடு அவரை வணங்குதல் வேண்டும்.

சு :— மனம் எப்படியிருந்தால் சுத்தமாகும்?.

க :—மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கருவிகளுள் முதலில் தேகம் சுத்தமாயிருத்தல் வேண்டும். குளித்தல் சுத்தமான உடையைத் தரித்தல், சுத்தபோஜனம் செய்தல், சுத்தமான வேலைகளைச் செய்தல், முகமலர்ந்திருத்தல் முத லியவற்றால் சரீர சுத்தியுண்டாம். பொய் சொல்லாமை, கடுஞ்சொல் பேசாமை, கோள் சொல்லாமை, பயனில் சொல்பேசாமை, இன்சொல் கூறல் முதலியவற்றால் வாக் குச்சுத்தம் உண்டாம். ஐம்புலன்களின் வழிச்செல்லா மல் சாந்தம், கருணை முதலிய பெருங்குணங்களை வகித்த லால் மனம் பரிசுத்தமாகும். மனம் சுத்தமாதற்கு வாக்குச்சுத்தமும் காயச்சுத்தமும் அத்தியாவசியமாம். சரீ ரம், வாக்கு, மனம் என்னும் மூன்று கருவிகளைச் சுத்தஞ் செய்யும் மார்க்கங்கள் முறையே சரியை கிரியை யோகம் என்று சொல்லப்படும். ஆலயத்தொண்டினாலும் ருத் திராக்க முதலிய சிவசின்னங்களைத் தரித்தலினாலும் காயச் சுத்தம் உண்டாம். சிவபூசை முதலியவற்றால் வாக்குச் சுத்த முண்டாம். யோகம்செய்து ஐம்புலன்களை யடக்கி மனதை கடவுளிடத்தில் நிலைபெறச் செய்தலினால் மனச் சுத்தம் உண்டாம். இம்மூன்று சுத்தமும் உண்டானால் மெய்ஞ்ஞானம் உண்டாம். மெய்ஞ்ஞானத்தின் பயனாக கடவுளிடத்தில் மெய்யன்பு உண்டாகும். மெய்யன்பு வள ருந்தோறும் பேரின்பம் விளையும். இதுதான் கடவுளை யடை

யும் வழி. இவ்வழிகளில் நீ நடப்பாயானால் கடவுளை யடைந்து எல்லையற்ற யின்பக்கடலில் ஆழ்ந்திருப்பாய்.

சு:—அப்பா, நீ சொல்லுவது ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாணிக்கமாய் இருக்கிறது. இதுவரையில் நான் உன்னையடைந்து இவைகளைத் தெரிந்து கொள்ளாமைக்கு மிகவும் வருத்தப்படுகிறேன். இதுமுதல் நீயே எனக்குக் குருவாயிருந்து என்னைச் சன்மார்க்கத்தில் செலுத்த வேண்டும்.

(சுந்தரம் தரையில் வீழ்ந்து கந்தசாமியை நமஸ்கரிக்கின்றான்)

க:—அப்பா, எழுந்திரு, உனக்கு நற்காலம் பிறந்து விட்டது. இனி நீயும் சிவசின்னங்களைத் தரித்துச் சிவாலய சேவையும், பெரியோர் வழிபாடும் விடாமற்செய். நமது அருமையினும் அரிய அமிழ்தினும் இனிய தேவாரப் பதிகங்கள் சில சொல்லுகிறேன்; கேள் ''

'எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே".

இத்திருப்பதிகத்தால் சிவசின்னங்கள் தரித்தவர்களை யாவர் சிவனாகவே கருதி வழிபடுகின்றார்களோ அவர்கள் மனதில் சிவபெருமான் குடிகொண்டிருப்பாரென்று வேதம் கூறுகின்றது.

"நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்று*
*மாரூரா வென்றென்றே யலறு நில்லே"*

இத்திருபதிகத்தால் என்றும் நிலைபேற்ற இன்பம் பெற வேண்டுவோர் சிவாலயத் தொண்டு செய்தல் வேண்டும் என்று சொல்லுகிறது.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளும்,

"அன்பர்பணி செய்யவென்னை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்றருளிச் செய்தனர். இதனால் பெரியோர் வழிபாட்டின் பெருமை யுணரலாகும்.

சு :—என் அண்ணலே, நான் இதுவரையில் சிவசின்னங்களைத் தரிக்கவில்லை, சிவாலயசேவை செய்ததில்லை, பெரியோரைப் பணிந்ததில்லை. நான் படித்த பாடசாலைகளுள் ஒன்றிலாவது இவைகளை எனக்குக் கற்பித்தாரில்லை. ஆதலால் நான் இவைகளைத் தாரித்துப் பாவியானேன். இனி நான் உய்யுமாறு கருணை கூர்ந்து தேவரீரே எனக்குச் சிவசின்னதாரணம் செய்தருளி என்னை யடிமையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

(மறுபடியும் சுந்தரம் தரையில்விழுந்து வணங்குகிறான்)

கு :—அப்படியே சிவசின்னதாரணம் செய்கிறேன், அப்பா எழுந்திரு. இப்போது நான் உனக்குச்செய்த உபதேசமானது வீணாகாமல் உடனே பயன்பட்டமைக்கு மிகவும் சந்தோஷப்படுகிறேன். இனி உனக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் என்னைக்கேள். எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன். தெரியாவிட்டால் தெரிந்த பெரியோர்களை யடுத்துத் தெரிந்துகொள்வோம்.

சு :—சுவாமி, இப்படிப் போதிப்பாரில்லாமல் என் போன்றார் பலர் வீணே கெட்டுப்போகிறார்களே, இவர்கள்

கெடாதபடி பாடசாலைகள்வைத்துச் சிறுவர்களுக்கு நம்மவர்கள் சமயபோதனை செய்யலாகாதா ?.

க :—இருக்கம் ஆதிமூல முதலியாரவர்கள் 'ஞான மணிவிளக்கு' என்னும் ஒரு நூலை யச்சிட்டிருக்கிறார்கள் ; அதைப் படித்தே எனக்குத் தமிழ்ப் பாஷையில் ஆர்வமும் கடவுட் பக்தியும் உண்டாயிற்று.

சு :—அப்படியானால் அந்நூலைக் கல்விச் சாலைகடோறும் கற்பிப்பது அவசிய மல்லவா ?

க :—அதற்கு என்ன சந்தேகம். வெகுநேரமாய் விட்டது, போய் இன்னொரு சமயம் வாரும்.

சு :—நமஸ்காரம் ; போய்வருகிறேன் சுவாமி.

# திருவாரூரர்

[P. தியாகராஜப் பிள்ளை]

## XXIV

### சுந்தரரும் பழமொழியும்

போற்றி

முன்னோர் பகர்ந்த மொழிபோற்றும் மூதறிஞன்
தன்னோர் புலவரெனத் தானினைப்பான்—என்னீர்
திருவாரூ ரன்சழலைச் சிந்தியா திருந்தீர்
பெருவாழ் வடையவே பின்.

மூவர்கள் பாடல்களில் இப்பொழுது இருக்கின்றவற்றுள் சுந்தரர் பாடல்கள் எண்ணிக்கையில் குறைவானபோதிலும் அவைகள் இயற்கை இன்பத்தை ஊட்டுவதிலும் பண்டைய வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுதலிலும்

மேம்பட்டு நிற்கின்றன. அல்லாமல் பல பழமொழிகளையும் எடுத்தாளுகின்றன. அப் பழஞ்சொற்களின் பொருளையும் பாடலில் அவைகளை என்ன கருத்தை விளக்க ஆளப்பட்டன என்பதையும் தெளிவாக அறிவது இப்பொழுது அருமை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் சுந்தரர் இருந்த நாளோ கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டு. அதாவது ஓராயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பாகும். அந்நாளில் இவைகள் என்ன பொருளில் வழங்கினவோ என்று திட்டமாய்ச் சொல்லுதல் எளிதன்று. அவருடைய பாடல்களுக்கு முன்னுளில் பேரறிஞர் பலர் இருந்தும் உரை காணுத பெருங்குறை இன்று சைவர்களுக்குப் பெரிதும் இடுக்கண் விளைக்கின்றது. திருமாலடியார்கள் தங்கள் திருமறைக்குப் பல படியாக உரைகள் செய்து அவற்றின் பொருளை ஊன்றி அறிகிருர்கள். சைவர்களுக்கு அவ்விதத் துணையில்லையே!

2. ஆரூரர் முன் சொன்னபடி பல மூதுரைகளைத் தமது பாடல்களினிடையே பெய்திருக்கின்ருர். திருநெல்வாயில் திருஅரத்துறைப் (3) பதிகத்தில் "வாணுர் நுதலார் வலைப்பட்டடியேன் பலவின் கனியீந் ததுபோல் வதன் முன், ஆணேடு பெண்ணு முருவாகி நின்ருய் அடியேனுய்யப் போவதோர் சூழல்சொல்லே" என்றனர். 'ஈந்தது' என்ற சொல் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் பதிப்பில் 'ஈயது' எனக் காணப்படுகிறது. அத்திருத்தம் சிறந்த எளிய பொருளைத் தருவதுபோலத் தோன்றுகிறது. ஆரூரர் பெருமான் பெண்கள் கண்வலையில் பட்டால், பலாச் சுளையில் அல்லது சக்கையில் உட்கார்ந்த ஈக்கள் அதன் பாலிலுள்ள பசையில் சிக்கிமீளமாட்டாது இறந்துபடுவதுபோல் மீளும் வழியிலாது மீள மீள சிற்றின்ப நோக்கினராய் இழிநெறி அடைய நேரும். ஆதலால் அப்பெண்கள் வலையிற் படுமுன்னே தம்மை மேனெறி சேர்க்கும் ஒரு சூழலை உரைத்தருள வேண்டும் என்று இரக்கின்ருர். 'ஈர்ந்தது' என்றதன் சிதைவாக 'ஈந்தது' என்பதைக் கொண்டால்

பலாக்கனியைப் பிளந்து வைத்தபின் அது பின் நீண்ட நாளைக்கு நல்ல நிலையில் இராது கெட்டுப் போவதுபோல் பெண்கள் வலையில் பட்டபின் தம் உடல் நலம் கெட்டு ஆண்டவனை வணங்கவேண்டும் என்ற நல்லெண்ணம் இல்லாமல் போய்விடும். அதற்கு முன் நன்னிலையடையும் சூழலைத் தமக்குத் தரவேண்டும் என்று மன்றாடுகிறார் என்ற பொருள் கொளலும் கூடும். 'ஈந்து' என்ற பாடமும் ஒரு பதிப்பில் (1898) காணப்படுகிறது. அதன் பொருள் ஆராய்தற்குரியது. இவ்வாறு சில பாடல்களில் சொற்கள் சிதைந்தும் மாறுபட்டும் காணப்படுவதன் காரணம் நம் முன்னோர் பெருங் கவலையுடன் பாதுகாவாத குறையே.

3. திருப்பரங்குன்றப் பதிகத்தில் (2) "பிண்டஞ் சுமந் தும்மொடுங் கூட மாட்டோம் பெரியாரொடு நட்பினி தென் றிருத்தும்" என்றார். இங்கு 'இருத்தும்' என்பதை வலித்தல் விகாரமாகக் கொண்டால் பொருள் சிறக்கு மென்று தோன்றுகிறது. (திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் இருத்தும் என்னும் சொல்லை விகுதிகாலங் காட்டும் தன்மைப் பன்மை முற்றாகக் கொண்டு இருப்போம் என குறிப்பு எழுதுகின்றார்). பெரியாரோடு நட்புக் கொள்வது இனிமை பயக்கும் என்ற ஆன்றோர் சொல் உளதேனும் பெரியோனாகிய உம்முடன் கூட விருப்பமில்லை. ஏனெனில் உம்முடைய செய்கைகளாகிய தலையணிதல், முதுகாடு உறைதல், பாம்பைக் கழுத்தில் கட்டல், நஞ்சை உண்டல் முதலானவைகள் உமக்கு ஆட்செய அச்சத்தை விளைவிக்கின்றன என்று சிவபெருமானின் வீற்றினைப் புகழ்கின்றார்.

4. திருமுதுகுன்றப் பதிகத்தின் முதல் திருப்பாட்டில் (43)

"நஞ்சியிடை யின்று நாளை யென்றும்மை நச்சுவார்
துஞ்சி யிட்டாற் பின்னைச் செய்வதென்னடி கேள்சொலீர்

பஞ்சியிடப் புட்டில் கீறுமோ பணியீர்அருள்
முஞ்சியிடைச் சங்கமார்க்குஞ் சீர்முதுகுன்றரே ''

என்னுமிடத்தில் "பஞ்சியிடப் புட்டில் கீறுமோ" என்ற விஞைவச் சிவபெருமானுக்கே விடுத்தார். இறைவனை இன்னே போற்றுமல் இன்று நாளை என்று வீணுள் கழிப்பவர் மாண்டுபோயின் என்ன செய்ய வல்லார் சொல்லுவீர் என்ற கேள்விக்குப்பின் "பஞ்சியிடப்புட்டில் கீறுமோ" என்ற மற்ருெரு கேள்வியை எழுப்பினுர். என்ன கருத்துடன் இதனை எழுப்பினர் என்று தெளிவாகத் தெரியவில்லை. பஞ்சினை உள் செலுத்துவதனுல் புட்டில் (பூக்குடலை) கிழிந்து போகுமோ என்கிருர். இவ்வுவமை எந்தப் பொருளை விளக்கக் கொடுத்தனரோ! ஒருகால் சிவபெருமானை இளமையிலேயே வணங்கிஞல் தம் புலன்களால் மற்றத் துறைகளில்வரும் உடலின்பத்திற்குக் கேடுநேருமோ என்று தயங்கும் இளைஞர்களை நோக்கிப் பெருமானை வணங்குதலால் மற்றைய நேரிய வழியில்வரும் இன்பமும்கெடாது என்ற குறிப்பினை அடக்கி இத்தொடரைத் திருவாய் மொழிந்தனர் போலும். இதனைப் பின்னும் சைவப் பேரறிஞர் கூர்ந்து ஆராய்வாராக.

5. 58-ம் திருக்கழுமலப் பதிகத்தில் "அயலவர் பரவவும் அடியவர் தொழவும், அன்பர்கள் சாயலுளடையலூற்றிருந்தேன், முயல்பவர்பின் சென்று முயல்வலை யானைபடுமென மொழிந்தவர் வழிமுழு தெண்ணிப் புயலினை... கண்டு கொண்டேனே" என்ற பாடலில் "முயல்வலை யானைபடும்" என்ற வழக்கை யாளுகிருர். இதன் கருத்தின் ஆழத்தை அறிதல் அரிதாக கிடக்கின்றது. சிலர் முயல் பிடிக்க வைத்த வலையில் யானை அகப்படும் என்று சொல்லக்கேட்டு அதனைத் தவறு என்று எண்ணி விடுத்துக் "கழுமல வளநகர் இறைவனைக் கண்டு கொண்டேன்" எனச் சொன்னுர் என்பர். ஆனல் இத்திருப்பாட்டின் முதலடியின் கருத்தை இப்பொருளோடு பொருத்திக் காட்டுவது

இயலுமோ என்ற ஐயம் எழுகிறது. அதை விடுத்து, ஆரூரர் அன்பர்களுடைய இரக்கத்தைப் பெற்றுத் திரு நெறியில் வீடு தேடி முயல்பவர்களாகிய அவ்வன்பர்கள், 'முயலுக்கு வைத்த வலையில் தற்செயலாய் யானையும் சிக்கும்' என்று சொல்லும் பழமொழியைப் பின்பற்றி மிகுந்த வருத்தமின்றி தான் முயல்பவர் பின்சென்று எளிதில் இறைவனைக் கண்டு கொண்டதைச் சொல்லுகின்றார் எனவும் பொருள் கோடல் தவறன்று எனத் தோன்றுகிறது.

6. "முன்னைச் செய்வினை யிம்மையில் வந்து மூடும்" என்ற ஒரு முதுமொழியைத் திருப்புறம்பயம் பதிகத்தில் (35) ஏழாவது பாடலில் எடுத்தாண்டார்? பண்டையில் செய்தவினையைப் பிறப்பிறப்பில் உண்டே தீர்க்கவேண்டும் என்ற அடிப்படையான சைவக் கொள்கையை இங்கு நிலை நாட்டினார். தம் நெஞ்சத்தை விளித்து "பண்டைவினை யிம்மையில் வந்துசேர்ந்து நற்செய்கையில் செல்லவிடாது மூடிக் கொள்ளும். ஆதலால் அப்பொழுதே புறம்பயம் தொழப் போதும்" என்றழைக்கின்றார். இக்கொள்கைக்கு இவர் முழுதும் உடன்பாடு என்பது மற்றொரு திருப்பதிகத்தினால் தெரிகிறது. திருவிடை மருதூர் (60)-ம் பதிகத்தில் "முந்திச் செய்வினை யிம்மைக்கண் நலிய மூர்க்கனாகிக் கழிந்தன காலம்" என்று பழவினையின் வாயிற்பட்டுத் தம் வாணாளை வீணாளாகக் கழித்ததற்காக வருந்தி "எந்தை நீயெனக் குய்வகையருளா யிடைமருதுறை யெந்தை பிரானே" என்று கூவியழைக்கின்றார். தம்பிரான் றோழனே இப்பழவினைக்கு ஆற்றாது புலம்பினார். ஆனால் மற்றைய எளிய மக்களின் நிலையைப்பற்றி என்ன சொல்வது!!

7. 60-வது பதிகத்தில் பல மூதுரைகள் காணப்படுகின்றன. முதற்பாடலில் "கழுதை குங்குமந்தான் சுமந்தெய்த்தாற் கைப்பர் பாழ்புக மற்றதுபோலப், பழுது நானுழன்றுள் தடுமாறிப் படுசுழித்தலைப்பட்டனனெந்தாய்" என்று

முறையிடுகின்றார். இந்த அடிகள் ஒரு பதிப்பில் சற்று மாறாகக் காணப்படுகிறது. "பாழ்புக, மற்றதுபோல" என்பதற்குப் பதிலாக "பாழ், புகழற்றது, போல" என அச்சிடப்பட்டுள்ளது. இவ்வரி மாற்றத்தால் பொருளும் மாறுகின்றது. கழுதையானது தனக்கு யாதொரு பயனுமிலாத குங்குமத்தை நடோறும் சுமந்து சுமந்து இளைத்துப் போகுமாயின் அதனை உடையவன் இனிது வேலைக்கு உதவாது என்று வீணே வெறுத்துத் தள்ளி விட்டிடுவர்; அதற்கு யாதொரு ஊதியமுமில்லை; அதைப்போல் நானும் பயனற்றவைகளை மேற்கொண்டு உழன்று தடுமாறி செய்வதின்னதென்று அறியாது மயக்கமுற்றேன். 'கழுதையின் செயலும் பின்னடைந்த நிலையும் எனக்கும் பொருந்தும்' என்று வருந்துகிறார். இச்செய்யுளிற்கு மற்றொரு பொருளும் கொள்ளலாம். கழுதை குங்குமத்தைச் சுமந்துகொண்டு போட்டுவிட்டால் அதனை உடையவன் பாழ்நிலத்தில் போய் மேய்ந்துவர ஓட்டிவிடுவான். அதனிடத்தில் மிகவும் அன்பு காட்டமாட்டான். தனக்கு வேலை செய்யச் செய்வதோடு சரி; கழுதையின் உழைப்பெல்லாம் பிறர் நன்மைக்காகவே. அதற்கொரு ஊதியமுமில்லை. பாழில் ஓட்டிவிட்டால் அங்கு என் செய்வது என்று தெரியாமல் மயங்கும்; அதுபோல தாமும் பிறர்பொருட்டே உழைத்து உழன்று வருந்தி சுழலில் அகப்பட்டு மயங்கினர். தாம் அப்பயனற்ற நிலையை அடைந்ததற்காக வருந்தி முறையிடுகின்றார்.

8. அதே 60-ம் பதிகத்தில் "அரைத்த மஞ்சளதாவதையறிந்தேன்" என்றனர். மஞ்சளானது பலநாளைக்குக் கெடாமல் இருக்கக்கூடிய ஒரு பொருள். ஆனால் தண்ணீர் விட்டு அரைத்து வைத்துவிட்டால் அது சில நாளைக்குக்கூட இராது. கெடுதல் அடைந்துவிடும் போலும். அரைத்தமஞ்சளைப்போல் விரைந்து கெடக்கூடியது இவ்வுடல் என்பதை அறிந்தேன். இனி யான் "உய்வகை யருளாய்" என வேண்டுகிறார். 3-வது பாடலில் "புன்னுனைப்பனி வெங்கதிர் கண்

டாற் போலும் வாழ்க்கை பொருளிலை" என்கிறார். இங்கு வெப்பம் பொருந்திய ஞாயிற்றைக் கண்டவுடன் புல் நுனி மேல் தங்கிய சிறு நீர்த்துளி எவ்வாறு நீராவியாகி இருந்த விடம் தெரியாமல் போய் விடுமோ அதுபோல் இவ் வாழ்க்கையானது மிக விரைவில் அழிந்து ஒழிந்து போகக் கூடியது. அதனால் யாதொரு நிலைத்த பொருளுமில்லை என்று மேற்கண்ட உவமையால் விளக்குகின்றார். பின்னும் 9-வது பாடலில் "வாழைதான் பழுக்கு நமக்கென்று வஞ்ச வல் வினையுள் வலைப்பட்டு...அறியாத ஏழையேனுக்கு உய்வகை யருளாய்" என்று பாடுகிறார். இடத்தை நோக்கினால் ஏதோ, பெருநன்மை பயக்கும் என்று காத்திருந்த ஒருவன் பின் ஏமாந்திட்டதுபோலத் தாம் வல்வினையில் அகப் பட்டுக் கொண்டனர். வாழை பழுப்பது இயற்கை. யாரும் அதனை எதிர்பார்க்கலாம். பொதுவாக ஏமாற்றமடைவதை, இலவு காத்திட்ட கிளி என்ற உவமையால் விளக்குவர். இலவங்காய் பழுத்து நையாது, முற்றி நெற்றாகிக் கடினநிலை யடையும். கிளிக்குப் பயன் தராது. ஆகையால் ஏமாந்து விடும். ஆனால் வாழை பழுக்கும் என்று எண்ணுதலும் எதிர்பார்த்தலும் இயல்பே. இதில் எதிர்பார்த்து ஏமாறு தல் என்னவென்பது தெரியவில்லை. ஒருகால் பிறர்க்குரிய வாழை பழுத்தால் நாமடையலாம் என்று எண்ணி ஏமாந்து போதலை இங்கு உவமையாகக் கொண்டனர் போலும். இது மேலும் ஆராய்தற்குரித்து.

9. திருவாரூர்ப் பதிகமொன்றில் (95) "கன்றுமுட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல, என்று முட்டாப்பாடு மடியார் தங்கண் காணாது, குன்றின் முட்டிக் குழியில் வீழ்ந்தால் வாழ்ந்து போதீரே" இங்கு அடியார்களின் அன்பின் நிறைவை ஓர் உவமையால் தெரிவிக்கின்றார். கன்றுமுட்டிப் பாலுண்ணுவதால் பாலானது மடியில் நிறை கின்றது. அதுபோல் அடியார்கள் சிவபெருமானைப் பாடப் பாட அன்பு உள்ளத்தில் பெருகி நிறைகின்றது. அப்படிப்

பட்ட அன்பு ததும்பும் அடியார் கண் தெரியாமல் மேட்டில் இடறி பள்ளத்தில் விழப் பார்த்திருப்பது பெருமானது அருளுக்குப் பொருந்தாது. ஆதலால் "இரங்கி யருளவேண்டும்" என்ற குறிப்பை வைத்தனர். இத்திருப்பதிகத்திலேயே மற்றொரு (9-ம்) பாடலில் "பேயோடேனும் பிரிவொன்றின்னு தென்பர் பிறரெல்லாம்" என்று ஒரு பழமொழியை ஆளுகின்றார். 'பிறரெல்லாம்' என்றதில் எப்புலவரைக் குறித்தனரோ தெரியவில்லை. திருவாரூரருக்குப் பரவையார் காரணமாக முதலில் இரக்கமின்றி இருந்த போது தாம் பெருமானை விளித்து "வாய்தான் திறவீர் திருவாரூரர் வாழ்ந்து போதீரே" என்று பாடுகையில் தமக்குப் பரவையின் பிரிவு இன்னு தருகின்றது பேயேயாயினும் அதனிடம் பழகிவிட்டால் அதனினின்றும் பிரிவதும் துன்பத்தைத் தரும் என்று பெரியோர்கள் கூறுகின்றார். அதை நீர் "அறியீரோ" என்று மன்றாடுகிறார்.

10. திருப்புறம்பயப் பதிகத்தில் (35) திருவாரூரர் தம் நெஞ்சைப் பார்த்து "படையெலாம் பகடார வாளிலும் பவ்வஞ் சூழ்ந்தர சாளிலும், கடையெலாம் பிணைத் தேரைவால் கவலா தெழுமட நெஞ்சமே.........
...புறம்பயம் தொழப் போதுமே" என்று அறிவுறுத்துகின்றார். பல படைகளுக்குத் தலைவனாக ஆண்டபோதிலும் கடல் சூழ்ந்த உலகம் முழுதும் ஆண்டாலும் கடைசியில் எல்லாம் தேரை வால்போல் தேய்ந்துவிடும். அதனால் இம்மைப் பொருள்களுக்கு ஆவல்கொள்ளாமல் எம்பெருமான் கழலை வணங்கப்போவோம் வா என்று நெஞ்சினை யழைத்தார். இவ்வாறு பல முதுச்சொற்களையும் உவமைகளையும் ஆழ்ந்த பொருள்கள் விளக்கவேண்டித் தம் பாடல்களில் ஆண்டனர். ஆரூரர் வழங்கியுள்ள மற்றைய உவமைகளும் அணிகளும் வேறொரு இதழில் எழுதப்படும்.

# சீதையின் திருமணம்

["காந்தருவன்"]

மிதிலை மன்னன் தன் நாட்டிலே வதிந்த அருந்தவ முனிவர்களையு மந்தணரையு மழைத்துத் தன் உள்ளக் கருத்தினை யறிவித்தனன். அவர்களும் மன்னன் கூறி யாங்கு ஒரு பெரிய வேள்வி யொன்றை வேட்டற் கிசைந் தனர். இப்பெரிய வேள்விக்காக வேண்டிய பொருட்க ளெல்லாம் மிதிலா நகரத்தே வந்து குவிந்தன. இரும் பினைத் திரித்து முறுக்கி விட்டாலன்ன திரண்ட கொம் பினையுடைய ஏறுகளைப் பளிக்கு நுகத்திற்பூட்டி, வரம் பில்லாத மணிகளாற் புனையப்பட்ட பொற் கலப்பையிலே, வயிரத்தானியன்ற திண்ணிய கொழுவினைப் பொருத்தி, பெரிய வேள்விக்கான நிலத்தைப் பன்முறையுமுழுதனர்.

மன்னன் வேட்கும் வேள்வியாலாயபேறு வேட்கா முன்னரே கைகூடியாங்கு, கொழுமுனையிடத்தே கதிரவ னுதித்தா லென்னவும், புவிமடந்தையின் றிருவெழுந்தா லென்னவும், பாற்கடற்கண்ணே யமிர்தத்துடன்றோன் றிய திருமகளும் நாணி யொதுங்கும்படி தொழுந் தகைமையளாய பெண்ணரசி யொருத்தி தோன்றினள். அழகு பன்னெடுங்காலம் தவமுயன்று பெற்ற பேறென னுந் தன்மையளாய விவடன் குணங்களையென் கூறுவது. அவை இவளை யடைந்து பெருமைபெறத் தம்முட் பிணங்கு வனவாமே. புலவோர் உவமைக்காய் எடுத்தாளும் அத் திருமகடானே ஈங்குற்றன ளென்னில் அவட்கு வேறு ஒப்பு எங்ஙனம் கூறவமையும். அவளது அழகொழுகு திருமேனியின் வனப்பைக் கண்டுளந்தேறல் எவர்க்கோ

தான் பொருந்துவது. கணமுமோயாது கடிதினிமைக்கின்ற கண்களையுடைய, இந்த இழிந்த மண்ணோர்க்கு அது கூடுவதின்று. இமையா நாட்டம் பெற்றும் இருகண்ணால் அமையாதென்றெழிந்தார்கள் தேவர்கள். அவளைச் சிர மீது கரங்குவித்து இறைஞ்சுதலும் எம்மனோர்க்குக் கூடுவதின்று. உமையாளொக்கும் மங்கையரே விழைந்து அங்ஙனஞ் செய்தற்குரியர். இத்தகையளாய சீதையின் திருமேனி கண்டபின் மேனகையை யுள்ளிட்ட தெய்வப் பெண்களெல்லாரும் பொலிவிழந்து வருந்த, தன்னேரில்லாத மங்கையரடிபோற்ற மின்னரசென்னும்படி பெண்மை நலங் கனிந்து நின்றாள்.

> "சொல்லுந் தன்மைத் தன்றது குன்றுஞ் சுவருந் திண்ண
> கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்கனி நின்றாள்"

குன்றுஞ் சுவருமுதலானவே அவளழகு கண்டு உருகியே விட்டனவென்னின் வேறு யாமுரைப்பதென்னை?

சனகனும் இவளின் திருமணத்தையுன்னிக் கவலையுற்று அருந்தவர்களை யுசாவினன். மேருவை வில்லாக வாங்கிய வீரன் தன்பாகத்தே யுறைகின்ற வுமையினை யிகழ்ந்தானெனத் தக்கன் வேள்விசார்ந்து, தன் கைக்கொண்ட கார்முக மொன்றினாலவரை மடங்கடித்து, அவன் வேள்வியையு மழித்துத் தனது பெருஞ் சீற்றத்தையு மாற்றினான். அக்கொடிய சிலையைக் காணவுந் நடுங்குந் தேவர்கட்கிரங்கி, சனகன் குலத்துட்டோன்றிய மன்னனொருவன் பால் வைத்தனன். அக்கார்முகத்தை யேற்றும் ஆற்றல் வாய்ந்தானே மங்கையின் திருமணத்திற்கு முரியனென்பது சனகன் முதலிய யாவர்க்கு முடம்பாடாயிற்று.

தேனிலே மொய்த்தெழும் வண்டரென்ன, நிலவேந்தரெல்லாரும் சீதையின் பொற்புக்குத் தம்முள்ளமுமுரானு முடைதலாலே, திருமணத்தை விழைந்து வந்து கூடினார்

தக்கன் வேள்வியைப் பொடிசெய்து வெற்றிகொண்ட அக் கார்முகத்தைக் காணவுங் கூசி யாற்ருராய் மனந்தளர்ந்தனர். கையிஞற் றீண்டவு மஞ்சி நடுங்கி யகன்ருரெனினும், காதற் கடவுள் எய்து தொலேக்கும் பூங்கணேகட்காற்ருராய், சீதையை வலிந்துகொள்வான் ருெடங்கிப் பெருஞ்சமர் விளேத்தனர். மிகவும் உக்கிரமான போர்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன. ஈற்றில் இரவிலே கூகையைக் கண்டஞ்சிய காக்கைக ளென்னும்படியாக, அரிதினகன்று மறைந்தனர். அற்றைநாட்டொடக்கம் அப்பாழுஞ் சிலேயருகு சென்றவ ரெவருமிலர். அன்று மறைந்த வேந்தரிலெவராவது மீண்டுந் தோன்றிஞரல்லர். சனகனுக்குத் துக்கம் பொங்கி வழிந்தது. இனிச் சீதைக்கு மணமில்லேயென்றே அவன் நினேந்துவிட்டான். அவளுடைய நல்வாழ்வைச் சிதைத்த சிலேயின்மீது பெரிய வெறுப்புண்டாயிற்று.

சனகன் கவன்ருன். விதியின் விளேவு அவனுக்கு எப்படித்தெரியும். அந்த வரம்பில்லாத பெரிய அழகினேயுடையாளே, மணஞ்செய்தற்குரியவன் இராமனே யென்பதை, அவன் எவ்வாறு அறியமுடியும். சீதையின் மணத்தைச் சனகனல் நிறைவேற்ற முடியாவிட்டால் தருமமாவது இல்லேயா? "தருமமே தூதுசெல்ல" என்கின்ருர் கம்பரும். தருமமே வடிவான விசுவாமித்திரன் தனது வேள்வி காத்தற்கு இராமனே வேண்டிக்கொண்டான். "பெரிய காரியமுள" என்று கூறியவனே மிதிலேக்கும் வருமாறழைத்தே விட்டான்.

இந் நிலவேந்தர்க்கெல்லாம் காணவே யுள்ளம் நடுங்கச் செய்யும் சிலே இராமனுக்கு ஒருபொருளன்று. நிலமகளது நெடிய முதுகு வலிக்கும்படி மேருமலேயும் நாணநின்ற அக் கார்முகம், சீதை என்னும் நங்கைக்குச் சூட்டுதற்குரிய மலர் மாலேயாகவே தோன்றலாம். அராவணே துறந்துபோந்த அமலற்குமரியதுண்டோ? தெய்வப்புலமை வாய்ந்த கம்பர்

பெருமானுக்கு, இராமனைக்கொண்டு அச்சிலையை முறித்து, மணஞ்செய்விக்க மனமிசையவில்லை. வில்லேற்றினனிவளை யெய்தும்; கொல்லேறு தழுவினனிவளை யெய்தும் என்றற் றொடக்கத்தன வெல்லாம் வடநாட்டாரது மணமுறைகள். இம்முறைகளே ஆசுரமணம் எனவுங் கூறப்படுவன. அரக்கரால் எல்லாவுலகும் துன்புறுதலைக் கண்டுளம்பரிந்து அயனுமரனுஞ் சென்று வேண்டுதலாலே தயரதன் மதலையாய்த் தரணியிலுற்ற எம்பெருமானுக்குக் கைக்கிளைப்பாலதாய இந்த இழிந்த ஆசுரமணத்தைப் பொருத்துதற்கு எள்ளளவேனும் கம்பருக்கு உள்ளமிசைந்திலது. ஐந்திணையென்னும் அன்புடைக் காமத்தைப்பற்றிக் கம்பர் ஏலவேயறிந்திருந்தார். தமிழ் மணம் என்று சிறப்பித்தோதப்படும் மணவினையைப்பற்றி அவர் சிந்திக்கலானார்.

"காந்தர்ப்ப மென்பதுண்டாற் காதலிற்கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும் மறைகளே வகுத்தகூட்டம்"

என்றெல்லாம் காந்தருவ மணத்தை அவர் பின்னருங் கூறு கின்றார். காந்தருவ மணமாவது உருவுந் திருவுங் குலனுங் குணனும் பிறவுந் தம்முளொத்த தலைவனுந் தலைவியும், கொடுப்பாரு மடுப்பாருமின்றி, பால்வரை தெய்வமிடை நின்று புணர்க்க, ஒரு பொழிலகத்துத் தமியராய் எதிர்ப்பட்டுத் தம்வயமழிந்து புணர்வதாம். இத்தலைமக்களும் முன்னர்க் கருங்கடற் பள்ளிக்கண்ணே கூடியிருந்து பிரிந்து மீண்டுங் கூடிவாழ விழைந்தவர்கள். தம்மை யொப்பாரும் மிக்காரு மில்லாத தலைவர்கள். சீதைக்கு உண்மையிலே பொருத்தமான தலைவன் இராமனே. இஃது எங்கும் வெள்ளிடை மலையாய்த் தோன்றிய பின்னருமேன், ஒருவர்க் கொருவர் முந்துறப் போட்டி செய்து பெறும் ஆசுரமண முறையினைக் கைக்கொள்ள வேண்டுமெனக் கம்பர் பெருமானுடைய மனசிலே தோன்றிற்று. தம்மையாளுடைய

நாயகற்குக் காதல் மணவினையே செய்வதென முடிவு கொண்டுவிட்டார் கம்பர்.

சிவபிரான் தக்கன் வேள்வியைப் பொடிசெய்த வில்லை சனகன் குலத்திலே வைத்தது உண்மைதான். அதனை வளைத்து நாணேற்றுவானே சீதையின் மணத்திற்குரிய னென யாவராலு முறுதிப்படுத்தப்பட்டது முண்மைதான். அவ்வுறுதிப்பாட்டினின்று அவர்கள் ஒருபோதும் தவற மாட்டார்கள். எனவே இராம காதையைச் செய்தவர் பலரும், இராமன் அந்த வில்லை முறித்தே சீதையைப் பெற்றானென்று கூறிவிட்டனர். கம்பருக்கு இம்மணம் பொருந்தவேயில்லை. காதலின் தெய்வீக சத்தியை யறிந்தவர் கம்பர். மும்மையால் உலகந்தந்த முதல்வற்குபா காதல் அரிதாயிற்று. ஆயினுமித் தலைமக்களை ஒரு பொழிலிடத் தெதிர்ப்படச்செய்து புணர்ப்பது முடியாதாயிற்று. என்னை, அக்கொடிய கார்முகத்தை யேற்றினனே நங்கைக்குமுரிய னென்ன வுறுதிப்பட்டதை யாங்ஙனம் மறுக்கலாகும்.

இராமனுஞ் சீதையும் ஒரு பொழிலகத் தெதிர்ப்பட்டுத் தமியராய்ப் புணர்ந்தாரென்னலே உண்மையில் கம்பருக்கு மகிழ்ச்சி யளிப்பதாகும். இராமனுக்கு அது கூடுவதாயினுஞ் சீதைக்கு முடியாது. சீதை வில்லை வாங்கியவருக்கன்றே உரியள். இந்தப் பாழுஞ் சிலையைப்பற்றிய விடர்ப்பாடுகளை யொதுக்கி வைத்துவிட்டார் கம்பர். இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடென்ற முறையாக வொழுக்கங்களைக் கூறுவிடினும் காந்தருவமணத்தின் உள்ளீடான செய்திகளை யவர் கூறத்தொடங்கினர். பால்வரை தெய்வத்தினாணையால் ஒருவரை யொருவர் முந்துற வெதிர்ப்பட்டுத் தம்வயமென்பதழிய உள்ளங்க ளொன்றிவிடுதலே காந்தருவமணத்தின் உயரிய அம்சமாகும். இராமனையுஞ் சீதையையும் எதிர்ப்படச் செய்து அவர்களுள்ளங்களை யொன்றுவிப்பதாய உள்ளப்புணர்ச்சியை யளிப்பதென்று புலவர்

நினைந்துவிட்டார். இப்போது அப்பாழுஞ் சிலையைப்பற்றிச் சற்றே மறந்துவிட்டார். இத்தகைய சந்தர்ப்பங்களிலே தான் கம்பருடைய புலமையும் பொங்கி வழிவது. அதுவும் இராமனுடைய திருமணமென்றாற் சொல்லவும் வேண் டுமோ ?

" வடகடலிட்ட ஒருநுகம் ஒரு தொளைதென்கடலிட்ட கழியிடைச்சென்று கோத்ததுபோலவும், வெங்கதிர்க்கனலி யுந் தண்கதிர்மதியமுந் தங்கதி வழிவித் தலைப்பெய்தது போலவும். அவனுமிளைஞர் குழுவினீங்கி, இவளுமாயத்தாரி னீங்கி, தமியராய் ஒரு பொழிலகத் தெதிர்ப்பட்டனர் " என் றெல்லாங் கூறுகின்றார்களன்றே, அவ்வாறே இராமனும் அயோத்தி நீங்கி யருந்தவன் வேள்விகாத்து, இளவலோடும் முனிபுங்கவரோடும் மிதிலாநகரத் தெருவீதிவழியே வந்து கொண்டிருந்தான். சீதையுங் கன்னிமாடத்தே, தன் தாதியர் புடைசூழத் தாரகை நடுவண் தண்மதிபோலப் பொலிவுற்று விளங்கினள். மனத்தினாலே எண்ணற்குமரிய பெண்மை நலங் கனிந்த விப்பேதை இவ்வகையளாய்க் கன்னி மாடத்தே நிற்ப, எதிரே வீதியில் இராமனும் வருவதானன்.

ஏதோவொரு பெரிய காந்தசத்தியவர்களை யீர்த்தது போன்றிருந்தது. அவர்கள் ஒருவரை யொருவர் திரும்பி நோக்கினார்கள். கண்ணிணைகள் ஒருவழியியைந்தன. எங்கா வது அகன்றிடாதவாறு இறுகப்பிணித்துக்கொண்டன. அவ்வளவே சீதையும், நாணமும் மடனுமச்ச மென்றினைய வெல்லாந் துறந்தாள். உயிரினுஞ் சிறந்த நாணையும் மறந்து உள்ளத்தைப்பறிகொடுத்தாள். இராமனும் என்றும் நல்வழி யிலே ஏகுகின்ற மனத்தினையும் கலங்கா நிறையினையு மிழந் தான். அண்ணலு மவளும் தம்வய மென்பதழிந்து உள்ளம் நெகிழப் பெற்றனர். இருவருணர்ச்சியு மொன்றியது. கண் ணிணைகள் தம்முட்பிணித்ததும் உள்ளம் நெகிழ்ந்துணர்ச்சி யொத்ததும் நோக்கிய கணமே நடந்தேறியன.

"எண்ணரு நலத்தினு ளிளைய ணின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்"

ஒரு பொருளினை யொருவர் கண்டாராயின், சிறிது போழ்தாவது, அதனை நோக்கி, அதன் சிறப்பினாலே தம்முள்ளமுந்தப்பட்டு, அதனை விழைதல் செய்தலென்றே யுலகத்தியற்கை. காந்தருவ மணத்திலே தலைமக்கள் ஒருவரையொருவர் விழைதல் அங்ஙனமன்று. எக்காலமுந் தம்மொழுக்கங்களிற்றிரியாத தலைமக்கள் தம் வயமழிந்து விழைவு செய்தல் விதியின் பாலதாம். எனவே அவர்கள் விழைதல் காட்சி நிகழ்ந்த பின்னரன்றாம். காட்சியோடுடன் இளர்ந்தே நிறையழிவுமுள வொருப்பாடு முண்டாம். இவ்வாறான தூய தமி ழொழுக்கத்தினைக் கம்பர் நன்கறிவர். கண்ணிணை யொன்றையொன்று கவ்வ, உணர்வு நிலை பெறாதுள்ள மொன்றிட, அண்ணலு மவளு நோக்கினா ரென்கின்றார். நோக்கும் பொழுதும், உணர்வழிந்துள்ள மொன்றிய பொழுதும், ஒன்றெனவே அபேதமாகக் கூறிய கம்பர் பெருமானது புலமை விழுப்ப மறிந்து போற்றற்குரியது. காட்சியோடுடன் றொடர்ந்தே, நிறையழிவும் உள்ள மொன்றலு முண்டாமென்னுங் காந்தருவ மணத்தின் தன்மையைக் கம்பர் அழகாக அமைத்துவிட்டார்.

சீதை நோக்கிய நோக்காகிய கூரிய வேலிணைகள் இராமனது வலிய புயத்திற் றைத்தன. தாக்கிக் கொல்லும் அணங்கனைய ளென்றும் பாராது இராமனது நோக்கும் அவடனத்திற்றைத்தது, இவர்கள் இயற்கையாக நோக்கும் நோக்குகளல்ல இவை. இயல்பாய நோக்கு காட்சியை மாத்திரம் பயப்பது. இந்நோக்கிய நோக்குகள் தைத்து வருத்து மியல்பின வென்கின்றார்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள், என்னபயனுமில" இவர்கள் வாய்ச் சொற்களி னாலே ஒருவர்க்கொருவர் தம் வேட்கையையுரைத்து அன்பு செய்ய வேண்டுவதின்று. அவர் தம் கண்ணினனே தம் உள்ளக்கிடக்கை யெல்லாம் வேண்டியவா றுணர்த்துவர். "அறைபறை யன்னகண்ணார்" என்றார் வள்ளுவரும். இம் மட்டோ இவர்களுக்கு ஒருவரை யொருவர் தம்மிடத் தீர்த்துக் கொள்ளும் பாசமுமாயிற்றும். இராமன் தனது நோக்காகிய பாசத்தினல் சீதையைப்பிணித்துத் தன் மனத்தே வைத்தான். சீதையும் இராமனைத் தன்மனத்தே யீர்த்துக்கொண்டாள். இங்ஙனமாக இவர்கள் இதயங் களிலே மாறிப் புகுந்து கொண்டார்கள்".

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யையனு வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்"

"ஆனந்த வெள்ளத்தழுந்து மோருயிர்ருருக் கொண், டானந்த வெள்ளத்திடைத் திளைத்தாலொக்கும்" என்று கூறப்பட்ட இன்பத்தினை நுகர்தற்கு, ஓருயிரே இராமனுஞ் சீதையுமாக ஈண்டுற்றார்கள். அவர்கள் கண்டமாத்திரத்தே இரண்டுடற் குயிரொன்றாயினர்கள், இன்னுங் கருங் கடற் பள்ளியினீங்கி இத்துணைக் காலனும் கலவிதவிர்ந்து பிரிந்துறைபவர் மீண்டு கூடினல் அவர்கள் மகிழ்ச்சியும் சொல்லும் தரத்ததாமோ. அஃது இயலாதெனவே கம்பர் கூறி யொழிந்தார்.

"கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்
பிரிந்தவர் கூடினற் பேச வேண்டுமோ"

அந்தமற்ற அழகினை யுடையானாகிய இராமனை யணைய முடியாமையினல், அவள் ஓவியப்பாவையை யொத்தாள்.

இராமனுந் தன் சிந்தையையும் நிறையையும் பின்னேவிட்டு அக்கொடிய முனியுடனப்பாற் செல்லலானான். ஐந்திணை யென்னு மொழுக்கத்திலே, இயற்கைப் புணர்ச்சிக்குத் தமியராய் எதிர்ப்படலன்றே யிலக்கணம். கம்பர் அதனைப் பொருட்படுத்தாது முனிவனோடும் இளவலோடும் இராமனை யெதிர்ப்படச்செய்து, இயற்கைப் புணர்ச்சியிலே சிறந்த தாய உள்ளப் புணர்ச்சியைப் பொருத்தி விட்டார். மேல், மெய்யுறு புணர்ச்சிக்கெல்லா மிடையூறு யிருந்தவன் அம் முனிவனே யென்ற வெறுப்புணர்ச்சி, "முனியொடு மறைய போயினான்" என்ற சொற்றொடரிலமைந்திருப்பது நுனித்தறிவார்க்கு நன்கு புலனாம்.

கம்பர் பிடிவாதமாகத் தாம் விழைந்ததை நிறைவேற்றியே விட்டார். இங்ஙனம் தம்முளொத்த இத்தலைமக்கள் களவொழுக்கம் நிகழ்த்தி முறையானே வரைந்துபோகும் தமிழ் மணத்தையின்னும் பெறமுடியாது. இயற்கைப் புணர்ச்சியிலே விழுமிதான உள்ளப் புணர்ச்சியொன்றையே கம்பராற் றரமுடிந்தது. இராமன் சீதையை மணக்க வேண்டின் அக்கொடிய சிலையை நாணேற்றியே தீரவேண்டும். கம்பருக்கு இனி யதில் வெறுப்பின்று. நூறுதரமும் அதைச் செய்விக்க அவரிசைவார்.

மறுநாளே முனிவனிராமனை யழைத்துச் சனகன் கொலுமண்டபத்தே கொண்டுசென்றான். ஆண்டு இராமன் குலமுறையினையும் ஆண்மை நிலையினையும் எடுத்தெடுத்து மொழிந்தான். சனகனுக்குப் பழைய துக்கம் மேலும் வளர்வதாயிற்று. அவன் மனம் அந்த வேதனை தருகின்ற வில்லை நோக்கியது. தனது மாதினையு மெண்ணினான். அவன்நிலை யாராலுணர்த்த முடியும். போதகத்தை யொத்த, இராமனது பொலிவினை நோக்கிப் பெருமூச்செறிந்து "ஐயன்வில், ஏற்றுமேலிடர்க் கடலேற்றும்" என மொழிந்தனன். முனிவனுமிராமனைப் பார்த்தான்.

"பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்"

இராமன், நெய்வார்க்கப்பட்ட எரியென்னும்படி யெழலும், முனிவரரார்த்தனர். விண்ணவர் பூமழை பொழிந்தனர். நகர மாந்தர்கள் அகமலர்ந்தனர். இராமன் "மாகமடங்கலும் மால்விடையும்பொன், னாகமு நாகமு நாண நடந்தான்." அவன் தன் கையிலே சிலையை எடுத்தானோ இல்லையோ செவிகளெல்லாம் செவிடுபடும்படியான பேரொலி பிறந்தது. சனகன்றுயரும் விண்டது. முனிவன் அகம் மலர்ந்தது. நகர மாந்தர் மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ?

இராமனும் சீதையும் ஒருவரையொருவர் காதலித்துவிட்டனர். இனியவர் பிறரையுள்ளிற் கற்பழியும், இராமன் அன்று தன்னுளத்தைக் கலக்கிய கன்னிகையையன்றி வேறெவரையும் கண்ணினுற் பாரான். ஆயின் சிலேயேற்றலும் அந்நங்கையைப் பெறுவதற் கென்பது தெரிந்ததாகையால், அதனைவிழைந்து செய்து உள்ளம் மகிழ்ந்தான். சீதை யென் செய்வாள் பாவம், தன் கருத்தினைக் கொள்ளை கொண்ட அந்தக் கொண்டல் வண்ணனையன்றி வேறு கருதாளாமே, பிறரெவராவது சிலையேற்றித் தன்னை மணநேர்ந்தாலென் செய்வது. இதனை யெண்ணவே சீதையின் றுயர மளவுகடந்தது. அவ்வமையமே வில்லிறுத்த செய்தியுமந்தப்புரத்தை யெட்டியது. சீதை கலங்கினள். தன் உள்ளத்தினைக் கவர்ந்த அக்கார்வண்ணன்றானே வில்லேற்றினனென்று ஏங்கினள், பிறனயின் என் செய்வதெனப் பதைத்தாள். தன்தோழி கூறிய குறிப்புக்களைக்கொண்டு அவன்றானே வில்லேற்றியிருக்க வேண்டுமென் றெண்ணினள். "சொல்லிய குறியினத் தோன்றலேயவ னல்லனே லிறப்பனென்றகத்து ளுன்னினள்."

இன்று வில்லேற்றியவன் தான் கண்ட விராமனென்பது ஒரு ஐயவுணர்வே. இவ்வையவுணர்வுகொண்டு கடிமணத்திற் கிசைதலெங்ஙனம். மங்கையருக்குக் கற்பன்றோ கண்ணாவது. அன்று வீதியிற் கண்டவன்றானோ வில்லேற்றினானென்பதை, எங்ஙனம் உறுதியாக, அவளால் அறியமுடியும், அவளோ ஊமனைப்போன்று தனக்குற்ற நோயை நுவலமுடியாது விம்மலுறுகின்றாள். முன்னரே இராமனைக் காணாது வில்லேற்றி மணஞ் செய்திருந்தால், சீதைக்கு இக்கலக்கமான துன்ப நிலையேற்படாது. கம்பர் தமிழ் மணஞ் செய்துவைக்க முற்பட்டது சீதைக்குப் பெரிய ஆபத்தாய் முடிந்தது. கம்பர் இந்நிலையில் அவளைக் கைவிட விரும்பவில்லை. காதல் மணத்திற்குச் சந்தர்ப்பம் கொடுத்தவாறே, சீதையின் ஐயவுணர்வு தெளிதற்கு மொரு சந்தர்ப்பத்தை யளிக்கிறார். ஐயவுணர்வுபோய், மெய்யுணர்வு பிறந்துவிடின் கடிமணத்திற்குத் தடையேது ?

தயரதன் முதலானோர் வந்து சேர்ந்தனர். சேடியர் சீதையைக் கோலஞ் செய்து மண்டபத்தே தருவித்தனர். தன் தாதை பக்கவிலே யிருந்தாள் சீதை. இவ்வமையத்திலே தன் ஐய வுணர்வைப் போக்குதற்குச் சீதைக்கு இடம் வகுத்தார் கம்பர். ஆயின் பெண்டிர் தமது நாண்டகைமையால், அவ்வமயத்திலெவரையுந் தலைநிமிர்ந்து பாராரன்றே. அதுவு மிராமனைப் பார்த்தால் முடியாதன்றே. இதற்கென்ன செய்வதென்று கம்பர் தயங்கவில்லை. அவள் தனது கைவளை திருத்தும் சாட்டாகக் கடைக்கண்ணினானே, இராமனை யுணர்ந்தாளென்று கூறிவிட்டார்.

"ஐயனை யகத்துவடி வேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள்"

சீதையின் ஐயம் தெளிந்தது, அவளினியிறக்க வேண்டியதில்லை. ஏன் ? அவள் தனது அகத்திலிருந்த வடிவத்தைப்

புறத்திலுமே கண்டுவிட்டாள். அன்று தன் கண்வழி நுழைந்த கள்வனையே இன்று கடிமணமயரப் போகின்றாள்.

கடிமணம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. கம்பர் பிடிவாதமாக நின்று இவர்களுக்கோர் காதல்மணமே செய்து வைத்தார். வில்லேற்றுதலையுமவர் ஒழித்துவிடவில்லை. அதனையும் பொருத்தமாகக்கொண்டு நுழைத்துவிட்டார். சீதையையும் அவடன் கற்புநெறி வழாது கடிமணத்திற் குடம்படும் வகைசெய்து, அவள் காதல்மண வினையை முற்று வித்துவிட்டார்.

# மகாமகோபாத்தியாயர் பண்டிதமணி

நமது சமாஜத்தில் 25-வது ஆண்டு விழாவில் தலைமை வகித்தவரும், திருக்கொள்ளம்பூதூர் கும்பாபிஷேக விசேஷ மகாநாட்டுத் தலைவரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியரும், தமிழாராய்ச்சிப் பகுதியின் ஆலோசனைத் தலைவருமாகிய சைவத் திருவாளர் பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியாரவர்கட்கு அரசாங்கத்தினர் "மகாமகோபாத்தியாயர்" பட்டமளித்ததை நமது சமாஜம் பாராட்டுகின்றது. இப்பெரியார் நீடூழி வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் அரும் பெருந்தொண்டுகள் புரியுமாறு ஞானபண்டிதஸ்வாமி அருள் புரிக.

## இரங்கற் கூட்டம்

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஆதரவில் 14-6-42-ல் உயர்திரு - சிவ. ந. சின்னக்கண்ணுப் பிள்ளை, பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் ஓர் இரங்கற் கூட்டம் கூட்டப்பெற்றது. அப்பொழுது தென்னிந்தியாவில் ஒப்பற்ற இசை வல்லுநரும், தேவாரத் திருமுறைகளைப் பண்ணுடனும், பொருள் இனிது விளங்கக்கூடிய முறையினும் பாடிக் கேட்போர் உள்ளம் பத்தியிற் பதியுமாறு செய்துவந்தவரும், தமது இளமைக் காலமுதல் சுமார் முப்பஃதாண்டுகள் இச்சபையோடு தொடர்புடையவரா யிருந்தவருமான திருநெல்வேலி தமிழிசைமணி - சுந்தர ஓதுவாமூர்த்தியவர்கள் 4-6-42-ல் அகாலமரண மடைந்தமை குறித்து இக்கூட்டம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதாகவும், அவர்களது திருவுருவப் படத்தைச் சபையில் திறந்து வைக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## திருவஞ்சைக்களத்தில்
## சுந்தரர் - சேரமான் குருபூசைத் திருவிழா

கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார் நன் முயற்சியாலும், கொச்சி சமஸ்தானப் போாதரவாலும் சென்ற 7 ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் 21-7-42 செவ்வாய்க்கிழமை யன்று திருவஞ்சைக்களத்தில் ஷை திருவிழா நடைபெறும்.

20-7-42 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு, கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார், திரு. சிவக்கவிமணி C. K. சுப்ரமணிய முதலியார், B.A., அவர்கள் தலைமையில் மலபார் எக்ஸ் பிரசில் போத்தனூரினின்றும் புறப்படுவார்கள். பகல் பன்னிரண்டு மணிக்கு இருஞாலக்குடா நிலையம் அடைந்து பஸ்ஸில் 10 நாழிகையும், போட்டில் 4 நாழிகையும் சென்று திருவஞ்சைகளம் சேர்வர். 21உ குருபூசை முடித்துக்கொண்டு மறுநாள் காலையில் திரும்பும் பயணம் தொடங்கும்.

வரும் அன்பர்கள் ஷை தேதியில் குறித்த வண்டியில் வந்து திருக்கூட்டத்தாருடன் சேர்ந்து கொள்வார்களாக. அன்று வர இயலாதவர் 21உயன்றும் இதே வண்டியில் வந்து அன்றைய விழா தரிசிக்கலாம்.

சேக்கிழார் திருக்கூட்டத்தார்.

## பிரிவாற்றுமை

நமது சமாஜத்தின் 18-வது, 21-வது ஆண்டு நிறை விழாக்களில் தலைமை வகித்த சைவப் பெரியார் திவான்பகதூர் - P. சுப்பையா முதலியாரவர்கள், (*Retired District and Sessions Judge*) 1-7-42-ல் சிவபத மடைந்த செய்தியை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். நமது சமாஜத்தின் பிரிவாற்றுமையை இவ் வறிக்கை மூலம் இப்பெரியாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

சமாஜ அடக்கவிலைப் பதிப்பு

# சீவக சிந்தாமணி

சீவக சிந்தாமணி மூலம், ஆராய்ச்சிக்குப் பயன்தரக் கூடிய அபிதான விளக்கம், அரும்பதவுரை, நரிவிருத்தம், திருத்தக்கதேவர் சரிதம், சீவக சரிதம், பாட்டு முதற்குறிப்பு முதலிய அடங்கிய அழகிய நூல். சமாஜ சுத்தப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. கிரவுன் 1×6 அளவினது 586 பக்கமுடையது; தடித்த வழுவழுப்பான காகிதத்திற் பதிக்கப் பெற்றது. காலிகோ அட்டைக் கட்டிடம்.

தனிப்பிரதி ஒன்றன் விலை ரூ. 1—8—0; ரிஜிஸ்தர் தபாற்செலவு 0—8—0

ஏழு பிரதிகளின் விலை ரூ. 10—0—0 ரயில்வே பார்சல் செலவு வேறு.

வேண்டுவோர் முன்பணம் அனுப்பி பெற்றுக்கொள்க.


Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.